# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2103 - 2018 දෙසැම්බර් මස 21 වැනි සිකුරාදා - 2018.12.21

*2103 ஆம் இலக்கம் – 2018 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III – காணிகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| காணி நிர்ணய அறிவித்தல்கள் | - |
| முன்னறிவித்தல்கள் | - |
| இறுதிக் கட்டளைகள் | - |
| அரசாங்க அதிபர்களினால் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| சிறுநிலச் சொந்தக்காரர் திட்டத்தின்கீழ் அறிவித்தல்கள் | - |
| நிர்ணய உத்தியோகத்தர்களினாற் காணி விற்பனைகள் | - |
| மேல் மாகாணம் | - |
| மத்திய மாகாணம் | - |
| தென் மாகாணம் | - |
| வட மாகாணம் | - |
| கிழக்கு மாகாணம் | - |
| வடமேல் மாகாணம் | - |
| வடமத்திய மாகாணம் | - |
| ஊவா மாகாணம் | - |
| சப்பிரகமுவ மாகாணம் | - |
| காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் | - |
| காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | 234 |
| காணி மீட்டல் பற்றிய அறிவித்தல்கள் | - |
| நானாவித காணி அறிவித்தல்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2019, சனவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018,திசெம்பர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

### 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

233 - B 81478 - 353 (2018/12)

# காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

*பின்னிணைப்பு 9*

## காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19 ஆவது பிரிவின் (4) ஆவது உபபிரிவின் கீழ் வழங்கப்பட்டுள்ள அளிப்புப்பத்திரத்தை பதிவழித்து இரத்துச் செய்தல் (104 ஆம் பிரிவு) தொடர்பான அறிவித்தல்

மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின், பிரதேச செயலாளர் /பிரதிக் காணி ஆணையாளர் ( மாகாணங்களுக்கிடையிலான) ஆர். ஏ. டீ.ரீ.என். தென்னகோன் ஆகிய நான், காணி அபிவிருத்திக் கட்டளைச் சட்டத்தின் 19(4) ஆம் உப பிரிவின் கீழ், அதி உத்தமராம் சனாதிபதி அவர்களினால் 1983.05.16 ஆந் திகதி வழங்கப்பட்டுள்ள மஹ/பிர/ 3083 ஆம் இலக்க அளிப்புப்பத்திரத்தின் உரிமையாளரான அட்டபாகே, தெல்பிட்டிய, எஸ்கொட் குடியிருப்பு எனும் முகவரியில் வசிக்கும் சிறி முதியான்செலாகே பண்டார மெனிகே என்பவருக்கு வழங்கி, கம்பளை மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தில் எல் .டி. ஓ.சி. 3/ 84ஆம் இலக்கத்தின் கீழ் 1985.10.07 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணிக்கு பதிலீட்டாளர் ஒருவராவதற்கு சட்டபூர்வமான உரித்தாளர் ஒருவர் இல்லாமையினால் அல்லது உரித்துடைய ஒருவர் இருந்தபோதிலும் அவர், பதிலீட்டாளராவதற்கு விருப்பமின் மையினால் பதிலீட்டாளராகப் பெயரிடுவதற்கு எவரும் இல்லை என அறிக்கையிடப்பட்டு உள்ளதனால் மேற்படி கொடைப்பத்திரத்தினை உரிய சட்டத்தின் 104 ஆம் பிரிவின் கீழ் இரத்து செய்வதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதனை இத்தால் அறியத்தருகிறேன் , இது தொடர்பாக ஏதேனும் எதிர்ப்புகள் இருப்பின் அதனை 2019.01.14 ஆந் திகதிக்கு முன்னர் எனக்கு அறிவித்தல் வேண்டும்.

### அட்டவணை

கண்டி நிருவாக மாவட்டத்தில் உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவின் கந்துகர இஹல கோரளேயின் தெல்பிட்டிய கிராம அலுவலர் பிரிவின் புஸ்ஸெல்லாவ வத்தேஹேன என்ற பெயரினைக் கொண்ட கிராமத்தில் அமைந்துள்ளதும் மற்றும் நிலஅளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட மு. பி. மஹ 468 ஆம் இலக்க துண்டாடப்படும் வரைபடத்தில் 16 ஆம் இலக்க காணித் துண்டெனக் காட்டப்பட்டுள்ளதும் 35 பேர்ச்சஸ் விஸ்தீரணத்தை உடையதுமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள வகையில் எல்லைகளைக் கொண்டுள்ளதுமான அரச காணி : எஸ்கொட்

வடக்கு:- காணித்துண்டு இல. 30;
கிழக்கு:- காணித்துண்டு இல. 30;
தெற்கு:- காணித்துண்டு இல. 24;
மேற்கு:-காணித்துண்டு இல. 17.

ஆர். ஏ. டீ.ரீ. என். தென்னகோன் ,
பிரதேச செயலாளர்/பிரதிக் காணி ஆணையாளர்
(மாகாணங்களுக்கிடைப்பட்ட)
உடபலாத்த, கம்பொல.

பிரதேச செயலகம்,
உடபலாத்த, கம்பொல.
2018, மார்சு 08.

12- 694

# நானாவித காணி அறிவித்தல்கள்

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/50966.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :ඉකො/ඉ/19/දී.බ.බෙන්/201.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், பெந்தோட்டை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கெகிரகத்தேன, மஹஊரகஹ கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஊரகஹ எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் ஆ.வ.இ.4050 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 01 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 15 பேர்ச்சு விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு ஸ்ரீ லங்கா டெலிகொம் மொபிடெல் வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:
வடக்கு : ஆ.வ.இ. 2229 வரைபடத்தின் காணி இல. 34 2/2 மற்றும் 37;
கிழக்கு : ஆ.வ.இ. 2229 வரைபடத்தின் காணி இல. 37;
தெற்கு: ஆ.வ.இ. 2229 வரைபடத்தின் காணி இல. 37 உம் 34 2/2 ;
மேற்கு: ஆ.வ.இ. 2229 வரைபடத்தின் காணி இல. 34 2/2 .

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்.**- முப்பது (30) வருடங்கள் (2018.10.02ஆந் திகதி தொடக்கம் );

**வருடாந்தக் குத்தகை.**-2018 ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூ.5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். 2018 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூ.5, 000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். இக் குத்தகைப்

பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20% கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

தவணைப் பணம்.- அறவிடப்படமாட்டாது;

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்வோர் குறித்த காணியை வர்த்தக நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2018.10.02 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக் காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக் கப்படமாட்டாது;

(எ) பிரதேச செயலாளர், ஸ்கோப்பிங் கொமிட்டி , இலங்கை விசாரணைக்குழு உள்ளிட்ட வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விஷேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஏ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(ஒ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக் குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018.12.21.

12- 684

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/48457.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. : PLC/ LC/ L9/ Put/ LL/02.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

புத்தளம் மாவட்டம், புத்தளம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட 606, மணத்தீவு கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த ஆனகுத்து எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் எப் வி பி 3357 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டு இலக்கம் 416 எனக் காட்டப்பட்டுள்ளதும் 167 ஏக்கர் (67.5820 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை இறால் வளர்ப்பு நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு எதீனா அக்குவா கல்ச்சர்ல் (தனியார்) வரையறுக்கப்பட்டது விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப்படுகிறது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 415 மற்றும் 417;
கிழக்கு : காணித்துண்டு இலக்கங்கள் 415, 96 மற்றும் 417;
தெற்கு : வரைபட இலக்கம் 417;
மேற்கு : காணித்துண்டு இலக்கம் 417.

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.-முப்பது(30) வருடங்கள் (2005.01.01ஆந் திகதி தொடக்கம் முன்னோக்கி 30 வருடங்கள்);

**வருடாந்தக் குத்தகை**.-பிரதான விலை மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட 2005 ஆம் ஆண்டுக்கான சந்தைப் பெறுமதியின் 4% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும் . இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட தொகையிலும் பார்க்க 50 % இற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.;

தவணைப்பணம்.- தவணைப்பணம் அறவிடப் படமாட்டாது;

(ஆ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(இ) குத்தகைக்காரரினால் இக்காணி இறால் வளர்ப்பு நோக்கம் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(ஈ) பிரதேச செயலாளர், இலங்கை முதலீட்டுச் சபை மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(உ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(ஊ) 2005.01.01 ஆந் திகதியிலிருந்து 5 வருட காலப்பகுதி பூர்த்தியாகும் வரையிலும் இந்தக் காணி குத்தகைக்குப் பெற்றுள்ள நோக்கத்தை நிறைவுசெய்வதற்கான கீழ்க்குத்தகை அல்லது கைமாற்றம் செய்தல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(எ) குத்தகைப் பணம் ஒழுங்காகச் செலுத்தப்படல் வேண்டும். அவ்வாறு செலுத்தப்படாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

வை.வை. என். பெரேரா,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018.12.21.

12- 695

---

காணி ஆணையாளர் நாயகத்தின் இல. : 4/10/57254.
மாகாணக் காணி ஆணையாளரின்
இல. :SPLC/ DEV/ 04/ NEL/28.

## முடிக்குரிய காணிப் பிரமாணங்களின் 21 (2) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காலி மாவட்டம், நெலுவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட இல. 231, மாவனான கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மாவனான எனும் கிராமத்தில் அமைந்துள்ளதும் F.V.P. 478 ஆம் இலக்க வரைபடத்தில் வரையப்பட்ட காணித்துண்டு இலக்கம் 110 எனக் காட்டப்பட்டுள்ளதும் சுமார் 0.1014 ஹெக்டேயர் விஸ்தீரணமுள்ளதுமான அரச காணியை வர்த்தக நோக்கத்திற்காக குத்தகைக்குத் தருமாறு கேட்டு இலங்கை மின்சார சபை விண்ணப்பித்துள்ளது என இத்தால் அறியத்தரப் படுகின்றது.

2. விண்ணப்பிக்கப்பட்டுள்ள காணியின் எல்லைகள் பின்வருமாறு:

வடக்கு : காணி இல. 109 உம் 93;
கிழக்கு : காணி இல. 109 உம் 93;
தெற்கு : காணி இல. 111 உம் 97;
மேற்கு : காணி இல. 111 உம் 97 .

3. குறித்த காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடியதாய் இருக்கின்றது. ஆகவே, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட நிபந்தனைகட்கும் கீழ்க் காணப்படும் நிபந்தனைகட்கும் அமைவாக இக்காணியைக் குத்தகைக்கு வழங்க அரசு முடிவு செய்துள்ளது :-

(அ) **குத்தகைக் காலம்**.- முப்பது (30) வருடங்கள் (2018.08.27ஆந் திகதி தொடக்கம் );

**வருடாந்தக் குத்தகை**.-2018 ஆம் ஆண்டுக்கு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான 5 மில்லியன் ரூபாவுக்கு (ரூ.5,000,000) குறைவாக உள்ள சந்தர்ப்பத்தில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட சந்தைப் பெறுமதியில் 2% வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும். 2018 ஆம் ஆண்டு மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியான 5 மில்லியன் ரூபாவுக்கு ( ரூ.5, 000,000) அதிகமாக உள்ள சந்தர்ப்பங்களில் குறித்த வருடத்திற்கான பிரதான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியின் 4 % வருடாந்தக் குத்தகையாகக் கொடுபடல் வேண்டும்.இக் குத்தகைப் பணமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை திருத்தியமைக்கப்படும். ஆயினும் திருத்தியமைக்கப்பட்ட குத்தகைப் பணம் முடிந்த 5 வருடங்களின் இறுதியில் கொடுக்கப்பட்ட வருடாந்த குத்தகைப் பணத்திற்கு 20 % கூட்டி கொள்ளுதல் வேண்டும்;

(ஆ) குத்தகைக்குப் பெற்றுக் கொள்வோர், குறித்த காணியை இலங்கை மின்சார சபையின் லெகோ மின் அபிவிருத்தி இணைப்புத் திட்டத்தை நடாத்திச் செல்லுதல் தவிர்ந்த வேறெந்த நோக்கத்திற்காகவும் பாவிக்கப்படல் கூடாது;

(இ) குத்தகைக்காரரினால் குத்தகை ஆரம்பித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்குள்ளாக பிரதேச செயலாளரின் மனம் திருப்தியுறும் வண்ணம் இக்காணி அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும்;

(ஈ) கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் சிறந்த முறையில் பேணப்படல் வேண்டும்;

(உ) பிரதேச செயலாளர் மற்றும் வேறு நிறுவனங்களினால் விதிக்கப்படும் ஏனைய விசேட நிபந்தனைகட்கும் இக்குத்தகை கட்டுப்படும்;

(ஊ) காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளபோது குத்தகைக்காரர் குத்தகை வழங்கப்பட்ட நோக்கத்தை குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்யாத பட்சத்தில் குத்தகையை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்;

(எ) 2018.10.26 ஆந் திகதியிலிருந்து குறைந்தது 5 வருடங்கள் நிறைவு பெறும் வரையிலும் இக் காணி குத்தகைக்குப் பெற்ற நோக்கத்தை நிறைவு செய்வதற்கான கைமாற்றம் அல்லது கீழ்க்குத்தகைக்கு விடுதல் அனுமதியளிக்கப்படமாட்டாது;

(ஏ) குத்தகைப் பணம் ஒழுங்காகக் கொடுபடல் வேண்டும். அவ்வாறு கொடுபடாத பட்சத்தில் ஒப்பந்தம் தானாகவே இரத்தாகிவிடும்.

4. இக்காணி குத்தகைக்கு வழங்கப்படக்கூடாது என்பதற்குத் தகுந்த காரணங்களை இவ்வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்ட தினத்திலிருந்து ஆறு வாரங்களுக்குள்ளாக எனக்குக் கிடைக்கத்தக்கதாக எழுதி அனுப்பாதுவிடின் இக்குத்தகை வழங்கப்படும்.

நுவனி சுதுசிங்க,
உதவிக் காணி ஆணையாளர்,
காணி ஆணையாளர் நாயகத்திற்காக.

காணி ஆணையாளர் நாயகத் திணைக்களம்,
"மிஹிகத்த மெதுர",
காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2018.12.21.

12- 888